Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 72 | உள்ளூர் - 13.03.2026 | வெள்ளி | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 72 | வெளியூர் - 14.03.2026 | சனி | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

‘பங்குனி மாத 12 ராசிகளுக்கான ஜோதிட பலன்கள்’!

செவிலியர் வேலைவாய்ப்பு: விளையாட்டு இட ஒதுக்கீட்டில்!

இபிஎஃப் மாஸ் அறிவிப்பு!

விஜயை முதல்வராக ஏற்றால் கூட்டணி: த.வெ.க.!

## அசாமில் பிரதமர் மோடி..!



புதுடெல்லி, மார்ச். 13–

தேர்தலை முன்னிட்டு பிரதமர் மோடி 2 நாட்கள் சுற்றுப் பயணமாக மார்ச்.14 ,அசாம் சென்றார்.


அசாம் மாநிலத்தில் 2 நாட்கள் பல்வேறு வளர்ச்சி திட்டப் பணிகளை தொடங்கி வைத்தார். அசாம் மாநிலத்தில் ரூ.47,800 கோடி மதிப்புள்ள திட்டங்களை தொடங்கி வைத்தார்.

அசாமில் ரயில் பெட்டி பழுது பார்க்கும் தொழிற்சாலை மற்றும் 6 பாலங்களுக்கு அடிக்கல் நாட்டினார். அசாம் மாநிலத்துக்கு புதிதாக 3 ரயில் சேவைகளை தொடங்கி வைத்தார்.

## ஆழமான, நீண்டகால பாதிப்பு?

# எண்ணெய், எரிவாயு விட பெரிய பிரச்சினை

## ஈரான் போரில் புது திருப்பம்..!!






புதுடெல்லி, மார்ச். 13–

மத்திய கிழக்கில் அமெரிக்கா–இஸ்ரேல்–ஈரான் இடையே நடைபெற்று வரும் மோதல் உலக எண்ணெய் மற்றும் எரிவாயு சந்தையை பெரிதும் பாதித்துள்ளது. ஒருப்பக்கம் உற்பத்தி ஆலைகள் மூடப்பட்டு வருகிறது இன்னொரு பக்கம் ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டு உள்ளது இவ்வற்றின் விலையை உயர்த்தியுள்ளது. ஆனால், இதை விட ஆழமான மற்றும் நீண்டகால பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய ஒரு பிரச்சினை இப்போது உருவாகி வருகிறது.

அது உர (fertiliser) விநியோக சங்கிலி. உலக உணவு உற்பத்தியை நேரடியாக பாதிக்கக்கூடிய இந்த பிரச்சினைக்கு இதுவரை போதிய கவனம் கிடைக்கவில்லை. ஆனால், இப்போது இது பெரும் அச்சுறுத்தலாக மாறியுள்ளது. மேலும் கண்டறிக fertiliser உர உர உற்பத்தி தொழில்நுட்பம் விவசாய உரங்கள் அம்மோனியா உரம் உணவுப் பாதுகாப்பு கருவிகள்

ஹார்முஸ் ஜலசந்தி

ஹார்முஸ் ஜலசந்தி வழியாக உலகின் 20 சதவீத எண்ணெய் போக்குவரத்து நடைபெறுகிறது என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால், இதே பாதை உலக நாடுகளின் விவசாய உர வணிகத்தில் 33 சதவீதத்தை கையாள்கிறது என்பது எத்தனை பேருக்கு தெரியும்..? சவுதி அரேபியா, கத்தார், ஓமான், ஐக்கிய அரபு அமீரகம் போன்ற நாடுகள் உர உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. யூரியா, சல்பர், அம்மோனியா போன்ற முக்கிய உர பொருட்களை இந்த நாடுகள் உற்பத்தி செய்கின்றன. ஈரான் அம்மோனியா உற்பத்தியில் உலக அளவில் மூன்றாவது இடத்தில் உள்ளது. இந்த பாதை மூடப்பட்டால், உலக நாடுகளுக்கான உர விநியோகம் பெரிதும் பாதிக்கப்படும்.

இந்த நிலையில் அமெரிக்கா–இஸ்ரேல்–ஈரான் இடையேயான மோதல் நீண்ட நாட்கள் தொடர்ந்தால், விவசாய உர உற்பத்தி மற்றும் ஏற்றுமதி தடைபடும். இது உலக விவசாயத்தை பாதிக்கும். பயிரிடும் காலம் தொடங்கும் நேரத்தில் உர விநியோகத்தில் தடை ஏற்பட்டால், உணவு பற்றாக்குறை ஏற்படும். இதன் மூலம் உலக நாடுகளில் உணவு விலை உயர (food inflation) தொடங்கும். இது எண்ணெய் விலை உயர்வை விட நீண்டகால பாதிப்பை ஏற்படுத்தும். உலக விவசாயிகள் தற்போது உர பொருட்களை பதுக்கி வருகின்றனர். இது உர விலையை மேலும் உயர்த்தும்.

**இந்தியாவுக்கு என்ன பாதிப்பு..?**

இந்தியா உர இறக்குமதியில் பெரும்பாலும் வளைகுடா நாடுகளை சார்ந்துள்ளது. ஹார்முஸ் பாதை மூடப்பட்டால், உர விலை உயரும். இது விவசாய செலவை அதிகரிக்கும், இதன் பாதிப்பாக பயிர் உற்பத்தி குறையலாம். உணவு விலை உயரும்.

இது அன்றாட செலவுகளை பாதிக்கும். குறிப்பாக கிராமப்புற மக்களுக்கு இது பெரும் சுமையாக மாறும். இந்தியா உர உற்பத்தியை உள்நாட்டில் அதிகரிக்க முயல வேண்டும். ஆனால் தற்போது இறக்குமதி சார்பு அதிகம். மொத்தத்தில், ஈரான் மோதல் எண்ணெய் சந்தையை மட்டும் பாதிக்கவில்லை. உர விநியோகத்தையும் பெரிதும் பாதிக்கிறது என்பது உலக நாடுகள் உணர துவங்கியுள்ளது.

## அண்டை அரபு நாடுகள் மீதான தாக்குதல் தொடரும்: ஈரானின் புதிய உச்சத் தலைவர் மோஜ்தபா காமேனி அறிவிப்பு!



துபாய், மார்ச். 13–

அண்டை நாடுகள் மீதான தாக்குதல் தொடரும் என்று ஈரானின் உச்சத் தலைவராக புதிதாக பொறுப்பேற்றுள்ள அயத்துல்லா மோஜ்தபா காமேனி அறிவித்துள்ளார். ஈரான் மீது அமெரிக்க, இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன. பதிலுக்கு ஈரானும் வளைகுடா நாடுகளில் அமைந்துள்ள அமெரிக்க படைத் தளங்கள் மீது கடும் தாக்குதலை நடத்தி வருகிறது.

இந்நிலையில் அமெரிக்கா, இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஈரான் உச்சத்தலைவரான அயத்துல்லா அலி காமேனி உயிரிழந்தார். இதையடுத்து ஈரானின் புதிய உச்சத் தலைவராக அயத்துல்லா அலி காமேனியின் மகன் மோஜ்தபா காமேனி (56) அண்மையில் தேர்வானார்.

இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் அயத்துல்லா மோஜ்தபா காமேனி காயம் அடைந்ததாகக் கூறப்பட்டது. ஈரான்–அமெரிக்க, இஸ்ரேல் போரின் வேகம் அதிகரித்து வரும் நிலையில் நேற்று மோஜ்தபா காமேனி ஓர் அறிவிப்பை வெளியிட்டார்.

**தொலைக்காட்சிகளில்...**

உச்ச தலைவராக பதவியேற்ற பின்னர் அவர் வெளியிட்டுள்ள முதல் அறிவிப்பாகும் இது. அவரது அறிவிப்பு ஈரானில் உள்ள தொலைக்காட்சிகளில் வாசிக்கப்பட்டது. அதில் அவர் கூறியிருப்பதாவது: வளைகுடாவிலுள்ள அரபு அண்டை நாடுகள் மீதான தாக்குதல்களை ஈரான் நாடு தொடரும்.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலுக்கு எதிரான ஒரு தாக்குதலாக, ஹார்முஸ் ஜலசந்தியை தொடர்ந்து மூடிவைப்போம்.

அமெரிக்க, இஸ்ரேல் தாக்குதலில் ஒரே நேரத்தில் 165 பள்ளி மாணவிகளை இழந்தோம். இந்த தாக்குதல் உட்பட எங்களைத் தாக்கியவர்களுக்கு நாங்கள் பதிலடி கொடுப்போம். எங்கள் நாட்டின் மீதான தாக்குதலுக்கு நாங்கள் பழிவாங்குவோம். இவ்வாறு அவர் அதில் தெரிவித்துள்ளார். மோஜ்தபா காமேனி.

## குஜராத் துறைமுகம் வரும் 22 கப்பல்கள்! அதிகாரப்பூர்வ அறிவிப்பு!




குஜராத், மார்ச். 13–

அடுத்த 72 மணிநேரத்தில் 22 சரக்கு கப்பல்களை கையாள தயாராக இருப்பதாக குஜராத் துறைமுகம் வெள்ளிக்கிழமை தெரிவித்துள்ளது. மேலும், குஜராத் மாநிலம், கண்ட்லாவில் உள்ள தீனதயாள் துறைமுக ஆணையம் வெளியிட்டிருக்கும் பதிவில், ”22 கப்பல்களை கையாளும் வகையில் பயணத் திட்டங்கள் மறுசீரமைக்கப்பட்டு, சிறந்த தரத்தில் சேவைகளை வழங்க துறைமுக பணியாளர்கள் திறமையாகச் செயல்பட்டு வருகின்றனர்” என்று பதிவிடப்பட்டுள்ளது.

துறைமுகத்தின் கப்பல் போக்குவரத்து மேலாண்மை அமைப்புகள், நிறுத்துமிடங்கள், சரக்கு கையாளுதல் குழுக்கள், கப்பல் வழித்தடங்கள் கண்காணிப்பு என ஒருங்கிணைப்புக் குழு நிறுவப்பட்டு அவசரகால அடிப்படையில் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஈரான் அதிபர் மசூத் பெஷேஷ்கியனை நேற்றிரவு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட பிரதமர் நரேந்திர மோடி, இந்தியர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், எரிபொருள் போக்குவரத்தின் பாதுகாப்புக்கு உறுதி அளிக்கவும் வலியுறுத்தியிருந்தார்.

இந்த நிலையில், தீனதயாள் துறைமுக ஆணையம் 22 கப்பல்கள் வருகை தரவுள்ளதாக அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.






தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் சென்னை, மெரினா கடற்கரை, உழைப்பாளர் சிலை அருகில், பெருநகர சென்னை மாநகராட்சியின் 5 ஆண்டு ஆண்டுகள் (2021–2026) சாதனைகளை விளக்கும் குறும்படம் LED திரையில் திரையிடுவதை நேரில் பார்வையிட்டார். உடன் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப் பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி. துணை மேயர் மு.மகேஷ்குமார், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், இணை ஆணையர் வீ.ப.ஜெயசீலன், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழு தலைவர் நே.சிற்றரசு மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

## ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் ஒப்புதல், நிதியுதவி வழங்க பிரதமர் மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்..!



சென்னை, மார்ச். 13–

ஒகேனக்கல் கூட்டுக்குடிநீர் திட்டத்தின் 3வது பகுதிக்கு ஒப்புதல், நிதியுதவி வழங்க வேண்டும் என பிரதமர் மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் அனுப்பியுள்ளார். தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் நிலையான மற்றும் சம அளவில் குடிநீர் வழங்குவதை உறுதி செய்திட வேண்டும். ஜல்ஜீவன் திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகை ரூ.3,112 கோடியை உடனே விடுவிக்க வேண்டும். 1.12 கோடி வீடுகளுக்கு செயல்பாட்டில் இருக்கும் குழாய்கள் மூலம் இணைப்புகள் வழங்கி தமிழ்நாடு சாதித்துள்ளது.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக தூத்துக்குடி மாவட்டம், உடன்குடியில், தமிழ்நாடு மின்உற்பத்தி கழகம் (TNPGCL) சார்பில், 13,077 கோடி ரூபாய் செலவில் புதியதாக நிறுவப்பட்டுள்ள 2×660 மெகாவாட் திறன் கொண்ட மிக உய்ய (Super Critical) அனல் மின் நிலையத்தின் அலகு–1னை திறந்து வைத்து, மின்சார உற்பத்தினை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கூடுதல் தலைமை செயலாளர்/ தமிழ்நாடு மின்சார வாரிய நிறுவனங்களின் தலைவர் ஜெ. ராதாகிருஷ்ணன், எரிசக்தித் துறை கூடுதல் தலைமை செயலாளர் மங்கத் ராம் சர்மா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## கட்சிப் பெயரை அறிவித்தார் சசிகலா! ஜெயலலிதா பெயர் இல்லை!!




சென்னை, மார்ச். 13–

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் தோழி சசிகலா, தான் தொடங்கிய கட்சியின் பெயரை இன்று அறிவித்தார். தன்னுடைய கட்சிக்கு அனைத்திந்திய புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகம் என்று பெயரிட்டிருப்பதாக, சென்னை போயஸ் கார்டனில் இன்று அவர் அறிவித்தார்.

ஜெயலலிதாவின் தோழி சசிகலா, புதிய கட்சியைத் தொடங்குவதாக ராமநாதபுரத்தில் நடந்த மாநாட்டில் பிப். 24–ஆம் தேதி அறிவித்த நிலையில், இன்று கட்சியின் பெயரை அறிவித்துள்ளார்.

சென்னை போயஸ் தோட்டத்தில் தன்னுடைய ஆதரவாளர்களுடன் செய்தியாளர்களை சந்தித்த சசிகலா, ஜெயலலிதா மறைவுக்குப் பின் எல்லாமே தலைகீழாக மாறிவிட்டது. வரும் சட்டப்பேரவைத் தேர்தலில், அனைத்திந்திய புரட்சித்தலைவர் மக்கள் முன்னேற்றக் கழகம் பெயரில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் போட்டியிடுவோம் என்றும் சசிகலா அறிவித்தார்.

மேலும், இந்தக் கட்சியின் சின்னத்தையும் அவர் அறிவித்துள்ளார். தென்னந்தோப்புதான், அபுமமுக கட்சியின் சின்னம். இதன் மூலம் நான் தனி மரமாக வரவில்லை, தோப்பாகத்தான் வந்துள்ளேன், நான் என்றைக்குமே மக்களுடன்தான் இருப்பேன் என்பதற்கே இந்த சின்னம் சாட்சி. ஒருமித்த கருத்துகள் கொண்ட கட்சிகளுடன் கூட்டணி வைத்து தேர்தலில் போட்டியிடுவேன். எடப்பாடி பழனிசாமி சாதித்தாரா இல்லையா என்பது தேர்தல் முடிவுகள் வந்த பிறகு தெரிந்துவிடும் என்றும் சசிகலா கூறினார்.

முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் தோழி சசிகலா, பிப். 24–ஆம் தேதி புதிய கட்சியைத் தொடங்குவதாக ராமநாதபுரத்தில் நடந்த மாநாட்டில் அறிவித்த நிலையில், இன்று கட்சியின் பெயரை அறிவித்துள்ளார். அவரது கட்சியின் பெயரில் ஜெயலலிதா பெயர் இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், புரட்சித் தலைவர் பெயர் இடம்பெற்றுள்ளது.

தலையங்கம்
மதுரை மணி
வெள்ளிக்கிழமை 13.03.2026
விசுவாவசு தமிழ் வருடம்
மாசி மாதம் 29-ம் தேதி

# அழிவின் விளிம்பில் 3,000 ஆண்டு கால குரும்பா கலை!




நீலகிரியின் 3,000 ஆண்டு கால பழமையான குரும்பா ஓவியக்கலை, பத்மஸ்ரீ கிருஷ்ண ராகவனின் மறைவுக்குப் பிறகு வெறும் 10 கலைஞர்களுடன் அழியும் நிலையில் உள்ளதால், அதை மீட்டெடுக்க அரசு மற்றும் சமூகத்தின் உடனடி ஆதரவு அவசியமாகிறது. நீலகிரி மலைத்தொடரின் ஆதி அடையாளங்களில் ஒன்றான குரும்பா ஓவியக்கலை, இன்று வெறும் 10 கலைஞர்களுடன் தன் வாழ்நாளின் கடைசி கட்டத்தில் போராடிக்கொண்டிருக்கிறது. சமீபத்தில் மறைந்த குரும்பா கலைஞர் கிருஷ்ண ராகவனுக்கு (புனைபெயர்: கிட்னா) மத்திய அரசு 'பத்மஸ்ரீ' விருது அறிவித்தபோது, அது அந்தப் பழங்குடி இனத்திற்குப் பெருமையைத் தந்தாலும், அத்தோடு ஒரு தீராத வலியையும் சேர்த்தே கொண்டு வந்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தின் கோத்தகிரி அருகே உள்ள வெள்ளரிக்கொம்பை கிராமத்தில் பிறந்த கிருஷ்ண ராகவன், 'ஆலு குரும்பா' பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர். மிகவும் நலிந்த பழங்குடிப் பிரிவாக (PVTG) வகைப்படுத்தப்பட்டுள்ள இந்தச் சமூகத்தின் வாழ்வியல் முறையே கிருஷ்ணாவின் ஓவியங்களுக்குக் கருப்பொருளாக அமைந்தது. தனது தாத்தா கித்தாரியிடம் காடுகளில் தேன் எடுப்பது, தினை சாகுபடி செய்வது போன்ற வாழ்வாதார கலைகளோடு சேர்த்து, பாறைகளில் ஓவியம் வரையும் பழங்காலக் கலையையும் அவர் கற்றுக்கொண்டார்.

எழுத்துப்பாறை போன்ற குகைகளில் முன்னோர்கள் வரைந்த ஓவியங்களை வெறும் பொழுதுபோக்காகப் பார்க்காமல், அவற்றைத் துணி மற்றும் காகிதங்களுக்குக் கொண்டு வந்து உலகறியச் செய்தவர் கிருஷ்ணா. இதனாலேயே இவரது பாணி 'கிருஷ்ணா ஸ்கூல் ஆப் குரும்பா ஆர்ட்' என்று ஆய்வாளர்களால் அழைக்கப்படுகிறது.

குரும்பா ஓவியங்கள் பெரும்பாலும் அந்தச் சமூகத்தின் சடங்குகள், தேன் சேகரிக்கும் முறை மற்றும் காடுகளுடனான அவர்களின் பிணைப்பைப் பிரதிபலிக்கின்றன. இந்த ஓவியங்களுக்கான வண்ணங்கள் முற்றிலும் இயற்கையானவை. வேங்கை மரத்தின் பிசினிலிருந்து மஞ்சள் மற்றும் ஊதா நிறங்களையும், பச்சைக்கீடா இலைகளிலிருந்து பச்சை நிறத்தையும், செம்மண்ணிலிருந்து சிவப்பு நிறத்தையும் அவர்கள் பிரித்தெடுக்கின்றனர். தற்போது இந்த இயற்கை வண்ணங்களைத் தயாரிக்கும் முறை தெரிந்தவர்கள் வெறும் மூவர் மட்டுமே எஞ்சியுள்ளனர் என்பதுதான் பெரும் சோகம்.

கிருஷ்ண ராகவனின் ஓவியங்கள் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் முதல் திரைத்துறையினரின் வீடுகள் வரை அலங்கரித்தாலும், அவரது சொந்த வாழ்க்கை வறுமையிலேயே கழிந்தது. காட்டு யானைகளால் சேதமடைந்த தனது வீட்டைச் சீரமைக்கக்கூடப் பணமில்லாமல் அவர் தவித்துள்ளார். ஒரு ஓவியத்திற்கு வெறும் 50 ரூபாய் முதல் 1,000 ரூபாய் வரை மட்டுமே பெற்றுக்கொண்டு, வறுமையிலும் தன் கலையை விட்டுக் கொடுக்காமல் வாழ்ந்திருக்கிறார்.

அவரது மறைவுக்குப் பின், அவரது மனைவி சுசீலா தனது நான்கு குழந்தைகளுடன் வாழ்வாதாரத்திற்காகக் கடும் போராட்டத்தைச் சந்தித்தார். யானைகள் நடமாட்டம் மிகுந்த பகுதியில் மூன்று கிலோமீட்டர் நடந்து சென்று கூலி வேலைக்குச் செல்ல வேண்டிய சூழலால், அவர் மேட்டுப்பாளையத்திற்கு இடம்பெயர நேர்ந்தது. வறுமை காரணமாக அவரது மகள் தனது கல்லூரி படிப்பையும் பாதியில் நிறுத்த வேண்டியதாயிற்று.

பத்மஸ்ரீ விருது அறிவிக்கப்பட்ட பிறகு தமிழக அரசு கிருஷ்ணாவின் குடும்பத்திற்கு உதவ முன்வந்தது. அவரது மனைவி சுசீலாவுக்கு ஊட்டியில் உள்ள ஏகலைவா பள்ளியில் நிரந்தர அரசு வேலை வழங்கப்பட்டுள்ளது. ஆனாலும், இந்தக் கலை அழிந்துவிடாமல் காப்பதே உண்மையான அங்கீகாரமாக இருக்கும் எனச் சமூக ஆர்வலர்கள் கருதுகின்றனர்.

தற்போது கிருஷ்ணாவின் மாணவர்கள் ஒரு சிலரே இந்தக் கலையைத் தொடர்ந்து வருகின்றனர். குரும்பா ஓவியக் கலைக்கு புவிசார் குறியீடு (GI Tag) பெற வேண்டும் என்பது கிருஷ்ணாவின் நீண்ட காலக் கனவாக இருந்தது. இக்கலையை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்ல மாணவர்களுக்குச் சான்றிதழ் படிப்புகள் மற்றும் ஊக்கத்தொகை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. 3,000 ஆண்டுகள் பழமையான ஒரு பண்பாட்டு அடையாளம், வெறும் விருதுகளுடன் நின்றுவிடாமல், முறையான ஆவணப்படுத்துதல் மற்றும் அரசு ஆதரவின் மூலம் மட்டுமே எதிர்காலத் தலைமுறைக்குக் கடத்தப்பட முடியும். கிருஷ்ணா ராகவன் விட்டுச் சென்ற அந்தத் தூரிகையைத் தாங்கிப் பிடிக்க இப்போது கைகள் தேவைப்படுகின்றன.



பழனியில் சத்யா நகர் குபேர பட்டினம் உள்ளிட்ட பகுதிகளில் புதிதாக கட்டப்பட்ட நியாய விலைக் கடைகளை சட்டமன்ற உறுப்பினர் ஐ பி செந்தில்குமார் திறந்து வைத்தார்

# திருப்பூரில் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம் கட்டும் பணி துவக்க விழா!




திருப்பூர், மார்ச். 13–

திருப்பூரில் ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடம் கட்டும் பணியினை துவக்கி விழாவினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அமைச்சர் மு.பெ சாமிநாதன் துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். மனிஷ் நாரணவரே இ.ஆ.ப, மேயர்.ந.தினேஷ்குமார் , துணை மேயர் ரா. பாலசுப்பிரமணியன், திருப்பூர் மாநகராட்சி 4–ம் மண்டலத் தலைவர் இல.பத்மநாபன், திருப்பூர் வணிகவரி இணை ஆணையர் சா.முகமது அர்சத், திமுக பகுதி செயலாளர் முத்தனம் பாளையம் குமார். கவுன்சிலர்கள் கோமதி குமார்.சாமிநாதன்.கவிதா நேதாஜி கண்ணன்.துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

# ராமநாதபுரத்தில் இயற்கை எரிவாயு விநியோகம்; பொதுமக்களுக்கு அறிவிப்பு!

THINK GAS

ராமநாதபுரம், மார்ச். 13–

ராமநாதபுரம் மாவட்டத்தில் சுருக்கப்பட்ட இயற்கை எரிவாயு (சி.என்.ஜி) மற்றும் குழாய் வழி இயற்கை எரிவாயு (பி.என்.ஜி) விநியோகம் தொடர்ந்து நடைபெற்று வருவதாக THINK Gas நிறுவனம் தெரிவித்துள்ளது. உலகளாவிய எரிசக்தி சந்தையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து மக்கள் மத்தியில் எழுந்துள்ள சந்தேகங்களை முன்னிட்டு இந்த விளக்கம் வழங்கப்பட்டுள்ளது.

நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தற்போது எரிவாயு விநியோகத்தில் எந்தத் தடையும் இல்லை என்றும், விலை மாற்றமின்றி சேவைகள் வழக்கம்போல வழங்கப்பட்டு வருகின்றன என்றும் கூறப்பட்டுள்ளது. வீட்டு சமையல் தேவைகள், அத்தியாவசிய சேவைகள் மற்றும் போக்குவரத்து துறைகளுக்கான எரிவாயு விநியோகம் தொடர்ந்து நடைபெறுகிறது.

இதுகுறித்து நிறுவனத்தின் மார்க்கெட்டிங் மற்றும் வணிகத் துறை தலைமை அதிகாரி வினுகுமார் பாலகிருஷ்ணன் தெரிவித்ததாவது: உலகளவில் ஏற்பட்டுள்ள சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு இந்திய அரசு இயற்கை எரிவாயு வழங்கலை ஒழுங்குபடுத்தும் புதிய உத்தரவை வெளியிட்டுள்ளது. இதன் அடிப்படையில் வீட்டு பயன்பாட்டிற்கான குழாய் வழி எரிவாயு மற்றும் போக்குவரத்திற்கான சி.என்.ஜி விநியோகம் முன்னுரிமையுடன் தொடர்ந்து வழங்கப்படும் என்று தெரிவித்தார். ராமநாதபுரம் பகுதியில் உள்ள சி.என்.ஜி நிரப்பும் நிலையங்களும் குழாய் வழி எரிவாயு சேவைகளும் வழக்கம்போல் செயல்பட்டு வருகின்றன. பொதுமக்கள் எந்த அச்சமும் இல்லாமல் சேவைகளை பயன்படுத்தலாம் என நிறுவனம் தெரிவித்துள்ளது. தற்போது குழாய் வழி இயற்கை எரிவாயுவின் விலை ஒரு எஸ்.சி.எம் அளவிற்கு ரூ.47 என்றும், சி.என்.ஜி எரிவாயுவின் விலை ஒரு எஸ்.சி.எம் அளவிற்கு ரூ.84.25 என்றும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# தமிழக வெற்றிக் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!



ராமநாதபுரம், மார்ச். 13–

ராமநாதபுரம் கலெக்டர் அலுவலக நுழைவு வாயில் முன்பு தமிழக வெற்றிக் கழகம் சார்பில் ராமநாதபுரம் கிழக்கு மாவட்ட த.வெ.க செயலாளர் மலர்விழி ஜெயபாலா தலைமையில் சாதிவாரி கணக்கெடுப்பு ஆய்வுக்கான அரசாணையை தமிழக அரசு உடனடியாக வெளியிட வேண்டும், மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கேடுகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும், தமிழகம் முழுவதும் பரவி வரும் போதைப் பொருட்கள் கலாசாரத்தை தடுக்க அரசு கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும், மேலும் தலைவர் விஜய் பங்கேற்கும் மக்கள் சந்திப்பு நிகழ்வை பாதிக்கும் வகையில் விதிக்கப்பட்டுள்ள ஜனநாயகமற்ற வழிகாட்டல் நெறிமுறைகளை திரும்பப் பெற வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ராமநாதபுரம் மேற்கு மாவட்ட த.வெ.க செயலாளர் மன்மதன் கண்டன உரையாற்றினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் ராமநாதபுரம், மண்டபம், திருப்புல்லாணி, திருவாடானை, பரமக்குடி, ஆர்.எஸ்.மங்கலம் உள்ளிட்ட ஒன்றியங்கள், பேரூர் மற்றும் கிளை நிர்வாகிகள், சார்பணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பில் மாவட்ட நிர்வாக குழு கூட்டம் மாவட்ட செயலாளர் சு.கணபதி தலைமையில் நடைபெற்றது



ஒட்டன்சத்திரம், மார்ச். 13–

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி மாவட்ட நிர்வாக குழு கூட்டம் மாவட்ட செயலாளர் சு.கணபதி அவர்கள் தலைமையில் ஒட்டன்சத்திரம் பயணியர் மாளிகையில் நடைபெற்றது. நிர்வாகி குழு சந்திப்பில் பல்வேறு தீர்மானங்கள் நடைபெற்றது அதில் ஒன்றிய நகர பேரூர் நிர்வாகிகள் பொறுப்புகளை விரைவாக தேர்வு செய்து பட்டியலை விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவனிடம் ஒப்படைத்து விரைவில் நிர்வாகிகள் பட்டியல் அறிவிக்க வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது அதில் முக்கிய தீர்மானமாக இந்த பகுதியில் பெரும்பான்மையாக வசிக்கக்கூடிய மக்களின் நீண்டநாள் கோரிக்கையான புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களுடைய திருஉருவ சிலையை நிறுவ வேண்டும் என்று மிக முக்கியமான கோரிக்கையை தீர்மானமாக மாவட்ட நிர்வாக குழு சார்பில் முடிவெடுக்கப்பட்டது.



பழனி 17 வது வார்டில் புதிய நியாய விலை கடையை எம்எல்ஏ செந்தில்குமார் தொடங்கி வைத்தார் இந்த நிகழ்வில் நகர செயலாளர். வேலுமணி நகராட்சி தலைவர் உமா மகேஸ்வரி கவுன்சிலர் சபாஸ்டின் உள்ளிட்டோர் பங்கேற்பு

# விளையாட்டு வீரர்களுக்கு கிரிக்கெட் உபகரணங்கள்!




சோழவந்தான். மார்ச்.13–

மதுரை மாவட்டம் பரவையில் வடக்கு மாவட்ட திமுக சார்பில் தமிழக முதல்வர். மு.க. ஸ்டாலின் 73.பிறந்த நாளை முன்னிட்டு மேற்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மாநகர் புறநகர் பகுதிகளில் கிரிக்கெட் குழுவினர்களுக்கு கிரிக்கெட் உபகர்ணங்கள் வழங்கும் நிகழ்ச்சி தனியார் திருமண மண்டத்திவ் நடைபெற்றறு.

இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட அலை தலைவர் பாலசுப்பிரமணியம் தலைமை தாங்கினார். மாநில நிர்வாகி அக்ரிகணேசன் மாநில சட்டதுறை துணை செயலாளர் ஜெயக்குமார். மாநில இளைஞர் அணி துணை செயலாளர் ராஜா ஆகியோர் முன்னிலை வகித்தனர்..

பேரூர் செயலாளர் ராஜாமணி வரவேற்றார். இதன்.பின்னர். பத்திரபதிவு மற்றும் வணிகவரிதுறை அமைச்சர் பி. மூர்த்தி. மேற்கு சட்டமன்ற தொகுதியில் உள்ள 131. கிரிகெட் குழுவிற்கு கிரிகெட் உபகர்ணங்களை அடங்கிய பைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.. இதில் மாநில செயற்குழ உறுப்பினர்கள் தனச்செல்வம் .வக்கீல் பாலாஜி. ஒன்றிய செயலாளர்கள் சிறை செல்வம் திருக்கும.ன் ஜெயராமன்.பொதுகுழ மனோகன் உள்பட பலர் பங்கேற்றனர்.



# மார்ச் 15-ஆம் நாள் பிறக்கும் 'பங்குனி'; 12 ராசிகளுக்கான ஜோதிட பலன்கள்!




நவகிரகங்களின் அரசன் என அழைக்கப்படும் சூரியன் குறிப்பிட்ட கால இடைவெளியில் தனது ராசியை மாற்றி வருகிறார். அந்த வகையில் வரும் மார்ச் 15–ஆம் நாள் தனது ராசியை மீண்டும் மாற்றுகிறார். கடந்த பிப்ரவரி 13, 2026 தொடங்கி கும்ப ராசியில் சஞ்சாரம் செய்து வரும் சூரியன், தற்போது மீன ராசியில் குடியேறி மற்ற ராசிகளுடன் தனித்துவமான தொடர்பை உண்டாக்குகிறார்!

தமிழ் பஞ்சாங்க குறிப்புகள் படி வரும் மார்ச் 15–ஆம் நாள் அதிகாலை மீன ராசியில் சஞ்சாரம் செய்யும் சூரியன், தனது செல்வாக்கை இழக்கும் வாய்ப்பு இருப்பதாக நம்பப்படுகிறது. இதன் தாக்கம் அனைத்து ராசியினருக்கும் கலவையான பலன்களை அளிக்கும் எனவும் கணிக்கப்பட்டுள்ளது. அந்த வரிசையில், எந்த ராசிக்கு என்ன பலன்? யாருக்கு கூடுதல் பலன் கிடைக்கும்? யாருக்கு சவாலாக அமையும்? என்பது குறித்து காணலாம்!

**மேஷம்!**

மேஷ ராசியினரின் ஜாதகத்தில் 12–வது வீட்டில் இந்த பெயர்ச்சி தாக்கத்தை உண்டாக்கும். பண விஷயங்களில் சவால்கள் அதிகரிக்கும், மன அழுத்தம் அதிகரிக்க கூடும். வீண் செலவுகள் அதிகரிக்கும், ஆடம்பர செலவுகளை முடிந்தளவுக்கு தவிர்ப்பது நல்லது. கடன் வாங்குவதோ, கொடுப்பதோ இந்த காலத்தில் கூடாது. உடன் பிறந்தவர்களுடன் தன்மையாக நடந்துக் கொள்வதும் அவசியம் என நிபுணர்கள் அறிவுறுத்துகின்றனர்.

**ரிஷபம்!**

ரிஷப ராசியில் பிறந்தவர்களின் ஜாதகத்தில் 11–வது வீட்டில் நிகழும் இந்த மாற்றம் அவர்களின் முன்னேற்றத்திற்கு உதவி செய்யும். தொழில் வாழ்க்கையில் நிலுவையில் இருந்த பணிகளை விரைவில் முடிக்கலாம், வியாபாரத்தை அடுத்த கட்டத்திற்கு கொண்டுச் செல்லலாம். பண வரவு அதிகரிக்கும், உறவினர்கள் மத்தியில் மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். விளையாட்டு துறையில் சாதிக்கும் வாய்ப்பும் காணப்படுகிறது.

**மிதுனம்!**

மிதுன ராசி கொண்டவர்களின் மூன்றாம் வீட்டின் அதிபதியான சூரியன், அவர்களின் ஜாதகத்தில் 10–வது வீட்டில் மாற்றத்தை கொண்டு வருகிறார். அதிர்ஷ்டம் அதிகரிக்கும், புதிய தொழில் வாய்ப்புகளை இந்த பெயர்ச்சி கொண்டு வரும். மிதுன ராசி கொண்ட பெண்கள், பணியிடத்தில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்துவார்கள், உயர் அதிகாரிகளின் கவனத்தை ஈர்ப்பார்கள். ஊதிய உயர்வும், பதவி உயர்வும் உங்களுக்காக காத்திருக்கிறது.

**கடகம்!**

கடக ராசியில் பிறந்தவர்களின் ஜாதகத்தில் 9–வது வீட்டில் நிகழும் இந்த பெயர்ச்சி, சுபிக்ஷமான பயணங்களுக்கு வழி வகுக்கிறது. நீண்ட தூர பயணங்களை மேற்கொள்வீர்கள், உங்கள் நீண்ட நாள் எதிர்பார்ப்புகளும் நிஜமாகும். தொழில் வாழ்க்கையில் போதுமான வருமானம் கிடைக்கும், புதிய நிதி ஆதாயங்களை உண்டாக்கும் வாய்ப்பும் கிடைக்கும். உங்கள் விருப்பமான மோட்டார் வாகனம் வாங்கும் வாய்ப்பும் கிடைக்கும்.

**சிம்மம்!**

சூரியனை அதிபதியாக கொண்ட சிம்ம ராசியினருக்கு இந்த பெயர்ச்சி 8–வது வீட்டில் மாற்றத்தை கொண்டு வருகிறது. வேத ஜோதிடத்தில் 8–வது வீடு ஆயுள், திடீர் மாற்றங்களை குறிக்கிறது. சூரியன் பெயர்ச்சியால் உண்டாகும் தாக்கம், உங்கள் வாழ்க்கையில் கூடுதல் பொறுப்புகளை கொண்டு வரலாம். ஆரோக்கியம் சார்ந்த விஷயங்களில் கூடுதல் கவனத்துடன் இருப்பது நல்லது. தேவையற்ற பயணங்களை தவிர்ப்பதும் நல்லது!

**கன்னி!**

கன்னி ராசியில் பிறந்தவர்களின் ஜாதகத்தில் 7–வது வீட்டில் மாற்றத்தை கொண்டு வரும் இந்த கிரக நிலை மாற்றம், கலவையான பலன்களை அவர்களுக்கு அளிக்கிறது. திருமண வாழ்க்கையில் மனஸ்தாபங்கள் அதிகரிக்கும், காதல் மனைவியுடன் வழக்குகள் உண்டாகும். திருமணம் முடிக்காத நபர்கள் வாழ்க்கையில் தடைகள் நீடிக்கும். காதல் வாழ்க்கையிலும் பிரச்சனைகள் நிறைந்து காணப்படும். நிதானமும், பொறுமையும் உங்களுக்கு தேவையான விஷயங்களாக பார்க்கப்படுகிறது!

**துலாம்!**

துலாம் ராசியில் பிறந்தவர்களுக்கு இந்த பெயர்ச்சி, 6–வது வீட்டில் தாக்கத்தை உண்டாக்கும். இந்த மாற்றம் ஆனது உங்கள் அதிர்ஷ்டத்தை அதிகரிக்கும், பல்துறை வெற்றி காணவும் உதவியாக இருக்கும். சமூகத்தில் உயர்ந்த இடத்தில் அமர்வதற்கான வாய்ப்பு அதிகமாகவே உள்ளது. போட்டி தேர்வுகளில் வெற்றிப்பெற்று, அரசு பணி பெறும் வாய்ப்பும் காணப்படுகிறது. துலாம் ராசி கொண்ட மாணவர்களுக்கு சிறப்பான ஒரு காலமாக இது அமையும்!

**விருச்சிகம்!**

விடா முயற்சிக்கு பெயர் பெற்ற விருச்சிக ராசியினரின் ஜாதகத்தில் 5–வது வீட்டில் மாற்றத்தை கொண்டு வருகிறார் சூரியன். படைப்பாற்றல், கலைத்துறையில் இருக்கும் நபர்களுக்கு சாதகமான திருப்பங்களை இந்த பெயர்ச்சி கொண்டு வருகிறது. இசை, ஓவியம், நடிப்பு, நாடகம் தொடர்பான துறையில் இருக்கும் நபர்களுக்கு சாதகமான ஒரு பெயர்ச்சியாக இது பார்க்கப்படுகிறது. காதல் உறவில் இனிமையான தருணங்கள் அதிகரிக்கும்.

**தனுசு!**

சாகச பிரியர்களான தனுசு ராசியினருக்கு இந்த சூரியன் பெயர்ச்சி, இனிமையான தருணங்களை பரிசாக அளிக்கிறது. சூரியன் உங்கள் ஜாதகத்தில் 4–வது வீட்டில் சஞ்சாரம் செய்கிறார். பணியிடத்தில் கூடுதல் பொறுப்புகளை கொண்டு வருகிறார், உங்கள் திறமைக்கான அங்கீகாரத்தையும் வழங்குகிறார். ஜவுளி, வர்த்தகம் தொடர்பான துறையில் இருக்கும் நபர்கள், தங்கள் பொருளாதார நிலையில் எதிர்பார்த்த முன்னேற்றத்தை காணலாம். கூடுதல் வருமானத்தை கொண்டு வரலாம்.

**மகரம்!**

மகர ராசியில் பிறந்தவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தும் ஒரு பெயர்ச்சியாக இது அமைகிறது. வருமான ஆதாரங்களை அதிகரிப்பீர்கள், குறிப்பாக பூர்வீக சொத்தின் வழியே கூடுதல் வருமானத்தை கொண்டு வருவீர்கள். நிலுவையில் இருந்த பணிகள் முடிவுக்கு வரும், பொருளாதார நிலை முன்பை விட சிறப்பாக மாறும். உங்கள் விருப்பமான பொருட்களை வாங்கும் வாய்ப்பும் கிடைக்கும். கடன் பிரச்சனைகள் தீரும் – மன நிறைவான வாழ்க்கை பிறக்கும்!

**கும்பம்!**

கும்ப ராசியில் பிறந்தவர்களின் சமூக வட்டத்தை இந்த பெயர்ச்சி விரிவாக்கம் செய்கிறது. நண்பர்கள் மற்றும் உடன் பிறந்தவர்களின் உதவியுடன் உங்கள் விருப்பமான தொழிலை தொடங்கும் வாய்ப்பு காணப்படுகிறது. பணியிடத்தில் காணப்பட்ட பிரச்சனைகள் முடிவுக்கு வரும், சக ஊழியர்களுடன் இணக்கமான உறவு உண்டாகும். பண விஷயத்தில் காரியங்கள் சுமூகமாக செல்லும். கல்வி, கற்பித்தல் துறையில் இருக்கும் நபர்களுக்கு சிறப்பான அனுபவங்கள் கிடைக்கும்.

**மீனம்!**

மீன ராசியில் லக்ன வீட்டில் உண்டாகும் இந்த பெயர்ச்சி, சனியின் இருப்பு காரணமாக சவாலான காலத்தை அவர்களுக்கு கொண்டு வருகிறது. பணியிடத்தில் காணப்படும் அலைச்சல், உங்கள் மன ஆரோக்கியத்தை பாதிக்கும். குடும்ப வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் உங்கள் விருப்பமான விஷயங்களை சுதந்திரமாக செய்யும் வாய்ப்பும் கிடைக்கும். பொருளாதார ரீதியாக உங்களை பலப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பும் உங்களுக்கு கிடைக்கும்.

# செந்தில் நகரில் புதிய நியாய விலை கடை திறப்பு!





திருப்பூர், மார்ச் 13–

திருப்பூர் மாவட்டம் காளிபாளையம் ஊராட்சி புதுப்பாளையம் செந்தில் நகரில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூபாய் 13.50 லட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக் கடையினை மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தார்.இந்த நிகழ்வில் வட்டார வளர்ச்சி அலுவலர் விஜயகுமார்.வடக்கு வடக்கு ஒன்றிய செயலாளர் காளிபாளையம் விஸ்வநாதன். முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ரத்தினம்பாள் சிவசாமி. உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் ஊர் பொதுமக்கள் பங்கேற்றனர்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



### இந்த பழங்களை சாப்பிட்ட உடனே தண்ணீர் குடிக்கிறீங்களா..? ஆனால் நீங்கள் ஆபத்தில் இருக்கிறீர்கள்..!



ஒருவரின் வாழ்க்கையில் மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் பெறுவதற்கான ஒரே வழி நல்ல ஆரோக்கியம்தான். நல்ல ஆரோக்கியம் ஒரு நபரை மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ ஊக்குவிக்கிறது. அதனால்தான் அனைவரும் தங்கள் ஆரோக்கியத்தில் சிறப்பு கவனம் செலுத்துவது மிகவும் முக்கியம். குறிப்பாக, சாப்பிடும் முறை சரியாக இருக்க வேண்டும். எந்த நேரத்திலும் எதையும் சாப்பிடுவது ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல. குறிப்பிட்ட நேரத்தில், சரியான இடைவெளியில் உணவு சாப்பிடுவது உடலுக்கு நல்லது. குறிப்பாக பழங்கள் சாப்பிடும்போது சில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டும் என்று மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றனர்.

பலருக்கு பழங்கள் சாப்பிட்ட உடனேயே தண்ணீர் குடிக்கும் பழக்கம் உள்ளது. இருப்பினும், இது ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். பழங்கள் சாப்பிட்ட உடனேயே தண்ணீர் குடிப்பது செரிமானத்தில் எதிர்மறையான விளைவை ஏற்படுத்தும் என்று மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர். பொதுவாக, சிலர் சாப்பிட்ட உடனேயே தண்ணீர் குடிப்பார்கள். மேலும், சிலர் சாப்பிடும்போது நிறைய தண்ணீர் குடிப்பார்கள். இருப்பினும், உணவின் போது அல்லது பழங்கள் சாப்பிட்ட உடனேயே தண்ணீர் குடிப்பது செரிமானத்தை சீர்குலைக்கும் என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள்.

பழங்கள் சாப்பிட்ட உடனேயே தண்ணீர் குடித்தால், அந்த தண்ணீர் வயிற்றில் உள்ள அமிலங்களுடன் கலக்கிறது. இது செரிமான செயல்முறையை பலவீனப்படுத்துகிறது. இதன் விளைவாக, வயிற்றில் அதிகப்படியான கார்பன் டை ஆக்சைடு வாயு உருவாகும் வாய்ப்பு உள்ளது மற்றும் வாயு பிரச்சினைகள் அதிகரிக்கக்கூடும். செரிக்கப்படாத உணவுத் துகள்கள் குடலில் இருந்தால், அவை தொற்றுநோய்களுக்கு வழிவகுக்கும்.

பழங்கள் சாப்பிட்ட உடனேயே, குறிப்பாக அதிக நீர் உள்ளவை குடிப்பது இன்னும் தீங்கு விளைவிக்கும். உதாரணமாக, பப்பாளி, வெள்ளரி, தர்பூசணி, மற்றும் மாம்பழம் போன்ற பழங்களில் இயற்கையாகவே நிறைய தண்ணீர் உள்ளது. அத்தகைய பழங்களை சாப்பிட்ட பிறகு மீண்டும் தண்ணீர் குடிப்பது உடலில் pH அளவைக் குறைக்கும். இது செரிமானத்தை பாதிக்கும். இது வயிற்று அசௌகரியம் மற்றும் வீக்கம் போன்ற பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும்.

இன்னும் முக்கியமான விஷயம் என்னவென்றால், இரவில் படுக்கைக்குச் செல்வதற்கு முன் பழங்களை சாப்பிடாமல் இருப்பது நல்லது என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். இரவில் பழங்கள் சாப்பிட்டால், அவற்றில் உள்ள அமிலங்கள் வயிற்றில் அசௌகரியத்தை அதிகரிக்கும். இது தூக்கக் கலக்கம், நெஞ்செரிச்சல் மற்றும் தொண்டை புண் போன்ற பிரச்சினைகளுக்கு வழிவகுக்கும். இரவில் பழங்கள் சாப்பிட்ட பிறகு தண்ணீர் குடிப்பது குறிப்பாக இந்தப் பிரச்சினைகளை அதிகரிக்கும் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்.

எனவே, ஆரோக்கியத்தைப் பராமரிக்க, பழங்களை சாப்பிடும்போது சரியான பழக்கங்களைப் பின்பற்றுவது மிகவும் முக்கியம். பழங்கள் சாப்பிட்ட உடனே தண்ணீர் குடிக்காமல் குறைந்தது 30 நிமிடங்கள் இடைவெளி எடுப்பது நல்லது. இந்த சிறிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைப் பின்பற்றுவதன் மூலம், செரிமானத்தை மேம்படுத்தலாம் மற்றும் பல உடல்நலப் பிரச்சினைகளைத் தடுக்கலாம். நல்ல உணவுப் பழக்கவழக்கங்கள் ஆரோக்கியமான வாழ்க்கையின் அடித்தளம் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

## லெவி'ஸ் '® பிராண்டின்'ஒவ்வொரு ஒரிஜினலின் பின்னால்' ஆலியா பட் முன்னிலையில்




சென்னை, மார்ச் 13–

உலகப் புகழ்பெற்ற டெனிம் பிராண்டான Levi's, தனது 2026 உலகளாவிய விளம்பரப் பிரச்சாரமானஒவ்வொரு ஒரிஜினல் பின்னால்' –ஐ இந்தியாவில் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த பிரச்சாரத்தில் உலகளாவிய பிராண்ட் தூதராக ஆலியா பட் முக்கிய முகம் இடம்பெற்றுள்ளார். 150 ஆண்டுகளுக்கு மேலாக கலாச்சார மாற்றங்களுடன் பயணித்து வரும் Levi's, தனித்துவம், தன்னம்பிக்கை மற்றும் உலகை வித்தியாசமாக பார்க்கும் மனப்பான்மையை கொண்டாடும் நோக்கில் இந்த பிரச்சாரத்தை முன்னெடுத்து வருகிறது.

இந்த பிரச்சாரம் அலியா பட்டின் பயணம், சுயநம்பிக்கை மற்றும் தனித்துவத்தை மையமாகக் கொண்டுள்ளது. இன்றைய தலைமுறையின் உண்மையான தன்மையை பிரதிபலிக்கும் அவரது வளர்ச்சி, இந்த பிரச்சாரத்தின் மையக் கருத்துடன் ஒத்துப் போகிறது. மேலும், Levi's இந்த சீசனில் பெண்களுக்கான புதிய டெனிம் வடிவங்களில் Cinched Waist Jean மற்றும் Loose Boot போன்ற ரிலாக்ஸ்டு ஃபிட் ஸ்டைல்களையும் அறிமுகப்படுத்தியுள்ளது.

இந்த பிரச்சாரம் குறித்து Hiren Gor, Managing Director South Asia, Middle East & Africa, Levi Strauss & Co., கூறுகையில், "Alia Bhatt புதிய தலைமுறை பெண்களின் தன்னம்பிக்கை மற்றும் தனித்துவத்தை பிரதிபலிக்கிறார். பெண்களுக்கான டெனிம் பிரிவில் எங்கள் கவனத்தை அதிகரிக்கும் இந்த முயற்சி, Levi's–ஐ ஒரு முன்னணி டெனிம் லைஃப்ஸ்டைல் பிராண்டாக மேலும் வலுப்படுத்தும்," என்றார்.

## எச்டிஎஃப்சி எர்கோ பொதுக் காப்பீட்டு நிறுவனம் பார்த்தனில் கோஷ் அவர்களை மேலாண் இயக்குநர் மற்றும் சிஇஓ-ஆக நியமித்துள்ளது!

சென்னை, மார்ச், 13–

எச்டிஎஃப்சி எர்கோ பொதுக் காப்பீட்டு நிறுவ னத்தின் இயக்குநர்கள் குழு, திரு. பார்த்தனில் கோஷ் அவர்களை இந்நிறுவனத்தின் மேலாண் இயக்குநர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி யாக (சிஇஓ) உயர்த்துவதற்கு இன்று ஒப்புதல் அளித்து ள்ளது. இந்த நியமனம் 16 ஏப்ரல் 2026 முதல் நடைமு றைக்கு வரும்; மேலும் இது ஐஆர்டிஏஐ மற்றும் பிற தேவையான அங்கீகா ரங்களுக்கு உட்பட்டது. இந்தப் புதிய பொறுப்பில் அவர் திரு. அனுஜ் தியாகிக்கு பின் பதவியேற்பார்.

நிதிச் சேவைகள் மற்றும் காப்பீட்டுத் துறையில் மூன்று தசாப்தங்களுக்கும் மேலான தொழில்முறை அனுபவம் கொண்ட திரு. கோஷ், உள்ளூர் சந்தையைப் பற்றிய ஆழமான புரிதலையும், பொதுக் காப்பீட்டுத் துறையின் முழுமையான மதிப்புச் சங்கிலியில் 16 ஆண்டு களுக்கும் மேலான விரிவான, பலதரப்பட்ட அனுபவத்தையும் கொண்டு ள்ளார். எல் & டி பொதுக் காப்பீட்டு நிறுவன த்துடனான இணைப்பைத் தொடர்ந்து, 2016–இல் அவர் இந்த நிறுவனத்தில் இணைந்தார். 1 மே 2025 முதல் அவர் நிர்வாக இயக்குநராகப் பணியாற்றி வருகிறார்.

திரு. கோஷ் அவர்கள் எல் & டி பொதுக் காப்பீடு, அப்போலோ மியூனிக் ஹெல்த் இன்சூரன்ஸ் ஆகி யவற்றின் வெற்றிகரமான ஒருங்கிணை ப்பு உள்ளிட்ட முக்கிய உத்திசார் திட்டங்களில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளார்,

இந்த அறிவிப்பு குறித்து எச்டிஎஃப்சி எர்கோ பொதுக் காப்பீட்டு நிறுவனத்தின் வாரியத் தலைவர் திரு. கேகி எம் மிஸ்திரி அவர்கள் இவ்வாறு கூறினார், "பார்த்தனில் அவர்கள் இந்த பொறுப்பிற்குத் தேவையான விரிவான தொழில் அறிவு, ஆழமான செயல்பாட்டு நுண்ணறிவு, வலுவான மூலோபாயத் தலைமை ஆகியவற்றைக் கொண்டு வருகிறார்.



எர்கோ இன்டர்நேஷனல் ஏஜி நிறுவனத்தின் மேலாண் வாரியத் தலைவரும், எர்கோ இன்டர்நேஷனல் நிறுவனத்தின் தலைமை செயல்பாட்டு அதிகாரியுமான திரு. தியோ கொக்கலாஸ் அவர்கள் மேலும் கூறியதாவது, "இந்தியா எங்களுக்கு ஒரு உத்திசார் வளர்ச்சி சந்தையாகும், மேலும் எர்கோ நிறுவனத்தின் இலட்சிய சர்வதேச இலக்குகளை அடைவதில் இது முக்கியப் பங்கு வகிக்கிறது. அதே வேளையில், கடந்த பல ஆண்டுகளாக பல்வேறு தலைமைப் பொறுப்புகளில் இந்நிறுவனத்திற்கு திரு. தியாகி அவர்கள் வழங்கிய மிகப்பெரிய பங்களிப்பிற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்."

## "நிலைத்த ரயில்வே கட்டமைப்பில் ஜிங்கின் முக்கியத்துவம் IRCE 2026-ல் ஹிந்துஸ்தான் ஜிங்க்"

சென்னை : மார்ச். 13–

மார்ச் 1214 வரை சென்னை நகரில் நடைபெறும் "சர்வதேச ரயில் கோச் கண்காட்சி (IRCE) 2026". நிகழ்வில், உலகின் மிகப்பெரிய ஒருங்கிணைந்த ஜிங்க் உற்பத்தியாளர்களில் ஒன்றான ஹிந்துஸ்தான் ஜிங்க் லிமிடெட் (BSE: 500188 | NSE: HINDZINC) ரயில்வே கட்டமைப்பை துருப்பிடிப்பில் இருந்து பாதுகாக்கும் ஜிங்க் அடிப்படையிலான தீர்வுகளை அறிமுகப்படுத்தியுள்ளது. மின்மயமாக்கல் தூண்கள், பாலங்கள், ஃபாஸ்ட்னர்கள் மற்றும் எஃகு அமைப்புகள் போன்ற ரயில்வே கூறுகளின் சேவை ஆயுளை ஜிங்க் கல்வனைசேஷன் தொழில்நுட்பம் எவ்வாறு நீட்டிக்கிறது என்பதையும் நிறுவனம் விளக்குகிறது.

இந்தியாவின் விரிவடைந்து வரும்ரயில்வேவலையமைப்பில் ஜிங்கின் பல்வேறு பயன்பாடுகளை எடுத்துக்காட்டும் வகையில், ஹிந்துஸ்தான் ஜிங்க் ரயில்–தீம் கொண்ட சிறப்பு கண்காட்சி பவிலியனை அமைத்துள்ளது. இதில் கல்வனைஸ் செய்யப்பட்ட எஃகு, துருப்பிடிப்பு பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் ரயில்வே கட்டமைப்புகளில் ஜிங்கின் நடைமுறை பயன்பாடுகள் விளக்கப்படுகின்றன. மேலும் சென்சார் செயல்படுத்தப்பட்ட இன்டர்அக்டிவ் தரை அமைப்பின் மூலம் பார்வையாளர்கள் ஜிங்க் பாதுகாப்பு ரயில்வே கட்டமைப்பின் பல்வேறு பகுதிகளில் எவ்வாறு வலிமை மற்றும் நீடித்த தன்மையை மேம்படுத்துகிறது என்பதை டிஜிட்டல் கதைகளாக அனுபவிக்க முடியும்.

இதுகுறித்து கருத்து தெரிவித்த ஹிந்துஸ்தான் ஜிங்க்லிமிடெட் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியும் முழுநேர இயக்குநருமான அருண் மிஸ்ரா (Arun Misra) இந்தியாவின் ரயில்வே கட்டமைப்புகள் வேகமாக நவீனமயமாகும் நிலையில், ஜிங்க் அடிப்படையிலான பாதுகாப்பு தொழில்நுட்பம் எஃகு அமைப்புகளின் ஆயுளை நீட்டித்து பாதுகாப்பையும் நீடித்த தன்மையையும் உறுதிப்படுத்துகிறது என்றார். உலகின் முன்னணி ஜிங்க் மற்றும் வெள்ளி உற்பத்தியாளர்களில் ஒன்றான இந்த நிறுவனம், 40க்கும் மேற்பட்ட நாடுகளில் வாடிக்கையாளர்களுக்கு சேவை வழங்கி, இந்தியாவின் நிலைத்தன்மை கொண்ட ரயில்வே கட்டமைப்பை உருவாக்கும் முயற்சிக்கு பங்களித்து வருகிறது.




## உலக உறக்க தினம்: சிறந்த 'தூக்க சரணாலயம்' உருவாக்க வழிகாட்டும் டைசன்!

சென்னை, மார்ச். 13–

அதிகமானோர் தரமான தூக்கத்தின் முக்கியத்துவம் உணரத் தொடங்கி உள்ள நிலையில், படுக்கையில் பிரத்யேக 'தூக்க சரணாலயம்' ஆக மாற்றும் போக்கு அதிகரித்து வருகிறது. தூக்கத்தின் தரத்தை மேம்படுத்த உட்புற காற்றின் தரம், மெத்தை சுகாதாரம், படுக்கைப் பொருட்கள் மற்றும் அறையின் தூய்மை போன்ற முக்கிய பங்கு வகிக்கின்றன என்று தொழில்நுட்ப நிறுவனம் டைசன் தெரிவித்துள்ளது.

இதற்காக சுத்தமான காற்றை வழங்கும் டைசன் ஹஷ் ஜெட் பியூரிஃபையர் சிறியது போன்ற சாதனங்கள் மற்றும் மெத்தைகள் ஆழமாக சுத்தம் செய்ய உதவும் டைசன் வேக்கியூம் கருவிகளை பயன்படுத்தலாம் என நிறுவனம் பரிந்துரைக்கிறது. மேலும் படுக்கை அறையில் தேவையற்ற பொருட்களை குறைத்தல், மெத்தைகள் சுத்தமாக வைத்திருத்தல் மற்றும் படுக்கைக்கு முன் காற்றில் மாசுகளை ஏற்படுத்தும் வாசனை மெழுகுவர்த்தி போன்றவற்றை குறைத்தல் தூக்க சூழலை மேம்படுத்த உதவும்.

இந்த முயற்சி குறித்து டைசன் நிறுவனத்தின் பேச்சாளர் கூறுகையில், "ஒரு சிறந்த தூக்க சரணாலயத்தை உருவாக்க படுக்கையறையை முழுவதும் மாற்ற வேண்டிய அவசியமில்லை.

உட்புற காற்றின் தரத்தை மேம்படுத்துதல், மெத்தை சுகாதாரம் பேணுதல் மற்றும் சுத்தமான சூழலை உருவாக்குதல் போன்ற சிறிய மாற்றங்கள் அழகான மற்றும் ஆரோக்கியமான தூக்கத்திற்கு வழிவகுக்கும்," என்றார்.



## டிஸ்னி அட்வெஞ்சர் தனது முதல் கடல் பயணத்தை சிங்கப்பூரிலிருந்து தொடங்கியது!

சென்னை , மார்ச். 13–

டிஸ்னி அட்வெஞ்சர் கப்பல் இன்று தனது முதல் விருந்தினர்களை வரவேற்று Singapore நகரிலிருந்து தொடக்கப் பயணத்தை ஆரம்பித்தது. இதன் மூலம் Disney Cruise Line ஆசியாவில் நிலைநிறுத்திய முதல் கப்பல் இது அமைந்துள்ளது. 100 ஆண்டுகளுக்கும் மேலாக The Walt Disney Company–யின் கதை சொல்லும் பாரம்பரியத்தை அடிப்படை யாகக் கொண்டு, டிஸ்னி, Marvel மற்றும் Pixar கதைகள் புதிய வடிவில் விருந்தினர்களுக்கு கொண்டு வருகிறது. இந்தக் கப்பலில் ஏழு முக்கிய தீம் பகுதிகள் அமைக்கப்பட்டுள்ளன: டிஸ்னி இமேஜினேஷன் கார்டன், டாய் ஸ்டோரி பிளேஸ், சான் ஃபிரான்சோக்கியோ தெரு, டவுன் சதுக்கம், வேஃபைண்டர் பே, டிஸ்னி டிஸ்கவரி ரீஃப் மற்றும் மார்வெல் லேண்டிங் குடும்பம் முழுவதும் ரசிக்கக்கூடிய லைவ் நிகழ்ச்சிகள், சாகச ரைட்கள், டிஸ்னி கதாபாத்திரங்களை நேரில் சந்திக்கும் வாய்ப்புகள், கரோக்கே அறைகள், கேம் ஷோக்கள் மற்றும் "நினைவில் கொள்ளுங்கள்"என்ற புதிய மேடைநாடகம் Walt Disney Theatre–ல் காட்சியளிக்கின்றன. மேலும் Marvel Landing–இல் க்ரூட் கேலக்ஸி ஸ்பின் மற்றும் Toy Story Place–இல் வூடி & ஜெஸ்ஸிஸ்




வைல்ட் ஸ்லைடுகள்போன்ற விளையாட்டு அனுபவங்களும் உள்ளன.

உணவு அனுபவத்திற்காக கப்பலில் ஆறு முக்கிய ரோட்டேஷனல் டைனிங் உணவகங்கள் உள்ளன; மேலும் கஃபேக்கள், விரைவான உணவுகள் மற்றும் 24 மணி நேர ரூம் சர்வீஸ் வசதியும் உள்ளது. சுமார் 17,000 சதுர அடி பரப்பளவில் உள்ள ரீட்டெயில் பகுதியில் National Geographic கடை மற்றும் டஃபி மற்றும் நண்பர்கள் போன்ற சிறப்பு கடைகளும் உள்ளன. மொத்தம் 6,700 விருந்தினர்களை ஏற்கும் திறன் கொண்ட இந்த Disney Adventure, ஆசிய குடும்பங்களுக்கு புதிய கடல் பொழுதுபோக்கு அனுபவத்தை அறிமுகப்படுத்துகிறது.

## தமிழ்நாட்டில் பெண்களின் தனிப்பட்ட பேருந்துப் பயணம் 70% உயர்வு; ரெட் பஸ் பிங்க் அறிக்கை!

சென்னை, மார்ச். 13–

உலகின் மிகப்பெரிய ஆன்லைன் பேருந்து டிக்கெட் முன்பதிவு தளமான ரெட் பஸ் (redBus), சர்வதேச மகளிர் வாரத்தை முன்னிட்டு வெளியிட்ட 'ரெட் பஸ் பிங்க் அறிக்கை' (redBus Pink Report) படி, தமிழ்நாட்டில் நகரங்களுக்கு இடையேயான பேருந்துப்




பயணங்களில் பெண்களின் பங்கேற்பு கணிசமாக அதிகரித்துள்ளது. 2019–ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2025–இல் பெண் பயணிகளின் எண்ணிக்கை 104% உயர்ந்துள்ளது. பெண்களின் பங்கு 2019–இல் 24% இருந்த நிலையில் 2025–இல் 33% ஆக உயர்ந்துள்ளது.

மேலும், தமிழ்நாட்டில் பெண்கள் தனியாகப் பயணம் செய்வது 2019–ஐ விட 70% அதிகரித்துள்ளது. குறிப்பாக 2130 வயதுக்குட்பட்ட இளம் பயணிகளின் எண்ணிக்கை 75% உயர்ந்துள்ளதுடன், இந்த வயதுப் பிரிவில் பெண்களின் தனிப் பயணங்கள் 56% அதிகரித்துள்ளன. இதோடு, பெண்கள் முன்னின்று செய்யும் குழு முன்பதிவுகள் (group bookings) 43% உயர்ந்துள்ளதும், வெளியூர்ப் பயணங்களைத் திட்டமிடுவதில் பெண்களின் முடிவெடுக்கும் பங்கு அதிகரித்திருப்பதைக் காட்டுகிறது.

இதுகுறித்து ரெட் பஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி பிரகாஷ் சங்கம் கூறுகையில், தென் மாநிலங்களில் பெண்களின் வெளியூர்ப் பேருந்துப் பயணம் வேகமாக வளர்ந்து வருவது இந்தியாவில் பெண்களின் சுதந்திரமான பயணப் போக்கை பிரதிபலிக்கிறது என்றார். பெண்கள் வேலை, கல்வி மற்றும் தனிப்பட்ட தேவைகளுக்காக அதிகமாக பயணம் செய்து வருவதால், பாதுகாப்பு தகவல்கள், பெண்கள் வழங்கும் பேருந்து மதிப்பீடுகள் மற்றும் ஆதரவு அமைப்புகள் போன்ற அம்சங்களை மேலும் வலுப்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.




இஸ்மாயில் லக்கி டூராவல்ஸ்

127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881


## வேலை வாய்ப்பு

### செவிலியர் வேலைவாய்ப்பு: விளையாட்டு இட ஒதுக்கீட்டிழல்!




செவிலியர் வேலை வாய்ப்பு எதிர்பார்த்து காத்திருந்தவர்களுக்கு தமிழ்நாடு அரசு ஒரு முக்கிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது. 3% மருத்துவ இட ஒதுக்கீட்டின் கீழ் இந்தப் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கலாம். விளையாட்டு இடஒதுக்கீட்டின் கீழ் மருத்துவ துறையில் மருத்துவச்சி / கிராம சுகாதார செவிலியர் பணிக்கான வரவேற்கப்படுகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு அரசின் அறிவிப்பு**

தமிழ்நாட்டில் விளையாட்டு மற்றும் விளையாட்டு வளர்ச்சிக்காக தமிழ்நாடு அரசு பல்வேறு முயற்சிகள் / திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டின் சார்பாக ஒலிம்பிக், பிற சர்வதேச அளவிலான போட்டிகளில், தேசிய, மாநில அளவில் பங்கேற்று பதக்கம் பெற்ற விளையாட்டு வீரர்களை ஊக்குவித்திடும் வகையில் அவர்களுக்கு அரசுத் துறைகள் / பொதுத்துறை நிறுவனங்களில் (PSUs) 3 சதவிகித இட ஒதுக்கீட்டின் கீழ் வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுவருகிறது.

விளையாட்டு ஒதுக்கீட்டின் கீழ் அரசுத் துறைகள் / பொதுத்துறை நிறுவனங்களில் 3% இடஒதுக்கீட்டின் கீழ் வேலை வாய்ப்பு பெறுவதற்கு கீழ்காணும் விளையாட்டுப் போட்டிகளில் விண்ணப்பிக்கப்பட்ட ஆண்டிற்கு முந்தைய கடந்த 5 ஆண்டுகளில் பெறப்பட்ட விளையாட்டு சாதனைகள் மட்டுமே தகுதியானவையாக கருதப்படும். குழு விளையாட்டுகளில், மாநில அளவில் குறைந்தது 50% போட்டிகளில் பங்கேற்றிருக்க வேண்டும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**சர்வதேச போட்டிகள் (வெற்றிபெற்றவர்கள் / பங்கேற்றவர்கள்)**

> ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள்,

> காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள்

> ஆசிய விளையாட்டுப் போட்டிகள்

> சர்வதேச ஒலிம்பிக் கமிட்டியால் (IOC) அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச விளையாட்டு கூட்டமைப்பால் (ISF) 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை அல்லது 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை அல்லது ஆண்டுதோறும் நடத்தப்படும் உலக சாம்பியன்ஷிப் போட்டிகள்.

> 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை அல்லது 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை அல்லது ஆண்டுக்கு ஒருமுறை, IOC ஆல் அங்கீகரிக்கப்பட்ட ISF இன் கீழ் நடத்தப்படும் காமன்வெல்த் சாம்பியன்ஷிப்கள் போட்டிகள்.

> 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை அல்லது 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை அல்லது IOC ஆல் அங்கீகரிக்கப்பட்ட ISF இன் கீழ் ஆண்டுதோறும் நடத்தப்படும்

**ஆசிய சாம்பியன்ஷிப்கள் போட்டிகள்**

> தெற்காசிய கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகள்

> பாரா ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள்

> ஆசிய பாரா விளையாட்டுப் போட்டிகள்

> சர்வதேச பார்வையற்றோர் விளையாட்டு சங்கம் (IBSA) காது கேளாதோருக்கான சர்வதேச விளையாட்டுக் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட உலக விளையாட்டுகள் மற்றும் காது கேளாதோர் விளையாட்டுகள்.

**தேசிய அளவிலான போட்டிகள் (வெற்றிபெற்றவர்கள் மட்டும்)**

> தேசிய விளையாட்டுப் போட்டிகள்.

> இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய விளையாட்டு கூட்டமைப்புகளால் நடத்தப்படும் தேசிய சாம்பியன்ஷிப் விளையாட்டுப் போட்டிகள்.

மாநில அளவிலான சாம்பியன்ஷிப்போட்டிகள் (வெற்றிபெற்றவர்கள் மட்டும்)

> தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் (SDAT) அங்கீகரிக்கப்பட்ட மாநில விளையாட்டு சங்கங்கள் நடத்தும் போட்டிகள்.

போட்டிகளின் அனைத்து நிலைகளிலும், சீனியர் அளவிலான போட்டிகள் மட்டுமே தகுதியான போட்டிகளாக கருதப்படும். விளையாட்டு வீரர்கள் தங்கள் விண்ணப்பத்தை தேவையான ஆவணங்களுடன் பின்வரும் தேதிகளில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் இணையதளமான www.sdat.tn.gov.inஇல் பதிவேற்றம் செய்யுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

i. அறிவிப்பு வெளியிடப்படும் தேதி – 11.03.2026

ii. இணையவழி விண்ணப்பத் தொடக்க தேதி – 12.03.2026 10.00 A.M முதல்

iii. இணையவழி விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் கடைசி தேதி – 11.04.2026, 5.00 P.M வரை.




# 15-ந்தேதி திமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டம்: துரைமுருகன் அறிவிப்பு!




சென்னை, மார்ச். 13–

வருகிற 15–ந்தேதி திமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டம் நடைபெறும் என பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவித்து ள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பு பின்வருமாறு; ''கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் ''தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்'' 15–03–2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில்'' நடைபெறும். அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். பொருள்: 2026 சட்டப்பேரவைத் தேர்தல்.''

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஐபிஎல் 2026 பயிற்சிக்கே கெடுபிடி.. 10 அணிகளுக்கும் புது ரூல்ஸ் போட்ட பிசிசிஐ!

சென்னை, மார்ச். 13–

ஐபிஎல் 2026 19ஆவது சீசன், மார்ச் 28ஆம் தேதி தொடங்க இருக்கிறது. இந்த நிலையில், அனைத்து அணிகளுக்கும் புதிய பயிற்சி வழிகாட்டுதல்களை பிசிசிஐ வெளியிட்டுள்ளது. ஓர் அணிக்கு ஆடுகளம் சாதகமாக மாறிவிடுவதைத் தடுக்கும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

அதன்படி, ஓர் அணி பயிற்சி செய்து முடித்த




ஆடுகளத்திலோ அல்லது வலைப்பயிற்சி இடத்திலோ மற்றோர் அணி பயிற்சி செய்யக் கூடாது. ஒவ்வோர் அணியின் பயிற்சிக்கும் புதிய ஆடுகளங்கள் தயார் செய்யப்பட வேண்டும். இரண்டு அணிகள் அடுத்தடுத்தோ அல்லது ஒரே நேரத்திலோ பயிற்சி மேற்கொண்டாலும், அவர்களுக்குத் தனித்தனி வலைகள் ஒதுக்கப்பட வேண்டும்.

ஓர் அணி தனது பயிற்சியை முன்கூட்டியே முடித்துவிட்டாலும், அந்த இடத்தை அடுத்த அணி பயன்படுத்தக் கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஓர் அணிக்கு ஆடுகளம் சாதகமாக மாறிவிடுவதைத் தடுக்கும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மேலும் பயிற்சி போட்டிகளை நடத்துவதற்கும் பிசிசிஐ கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

ஒவ்வோர் அணியும் இந்த சீசனில் அதிகபட்சமாக இரண்டு பயிற்சிப் போட்டிகளை மட்டுமே விளையாட முடியும். அதற்கும் பிசிசிஐயின் முன் அனுமதியைப் பெறுவது கட்டாயமாகும்.

இந்தப் போட்டிகள் முக்கிய ஆடுகளத்தில் இல்லாமல், மைதானத்தின் ஓரத்தில் உள்ள பக்கவாட்டு ஆடுகளங்களில் மட்டுமே நடத்தப்பட வேண்டும்.

இரவு நேரத்தில் மின் விளக்குகள் ஒளியில் பயிற்சிப் போட்டிகளை நடத்தினால், அது மூன்றரை மணி நேரத்திற்கு மேல் நீடிக்கக் கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தவிர, மைதானத்தின் முக்கிய ஆடுகளத்தைப் போட்டிக்காகத் தயார் செய்யும் பணிகளுக்காக, உள்ளூர் அணியின் முதல் போட்டி தொடங்குவதற்கு முந்தைய நான்கு நாட்களில் அந்த மைய ஆடுகளத்தில் எந்தப் பயிற்சியும் அல்லது பயிற்சிப் போட்டியும் நடத்தக் கூடாது என்று தடை விதிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்தக் காலகட்டத்தில் அணிக்குப் பயிற்சி தேவைப்பட்டால், மாநில கிரிக்கெட் சங்கம் மாற்று மைதானத்தை இலவசமாக ஏற்பாடு செய்து தர வேண்டும் எனவும், பயிற்சி நேரத்தைப் பொறுத்தவரை உள்ளூர் அணிக்கே முன்னுரிமை வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இரண்டு அணிகளும் ஒரே நேரத்தைக் கேட்டால், அணி மேலாளர்கள் பேசி முடிவெடுக்க வேண்டும் எனவும், அவர்களால் சுமுகமான முடிவை எட்ட முடியாவிட்டால், பிசிசிஐ தலையிட்டு இரு அணிகளுக்கும் நேரத்தைச் சமமாகப் பிரித்து வழங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தவிர, மார்ச் 16ஆம் தேதி முதல், அணிகளுக்கு இரண்டு பயிற்சி வலைகளும், பந்துகளை அதிரடியாக அடித்துப் பழகுவதற்கான ஒரு பிரத்யேக ஆடுகளமும் மைதானத்தின் ஓரத்தில் ஒதுக்கப்படும் எனவும் பிசிசிஐ தெரிவித்துள்ளது.

# இபிஎஃப் மாஸ் அறிவிப்பு!




இபிஎஃப் உறுப்பினரா நீங்கள்? அப்படியென்றால் இந்த பதிவு உங்களுக்கு மிக பயனுள்ளதாக இருக்கும். ஊழியர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு (EPFO) சிறிய செயல்படாத கணக்குகளுக்கான ஒரு முன்னோடித் திட்டத்தை அங்கீகரித்துள்ளது. பல ஆண்டுகளாக சிறிய இருப்புகளைக் கொண்டு செயல்படாமல் இருக்கும் கணக்குகளைக் கொண்டுள்ள லட்சக்கணக்கான ஊழியர்களுக்கு இந்திய அரசாங்கம் குறிப்பிடத்தக்க நிவாரணத்தை வழங்கியுள்ளது. இந்த திட்டத்தால் இபிஎஃப் உறுப்பினர்களுக்கு கிடைக்கக்கூடிய நன்மைகள் பற்றி இந்த பதிவில் தெரிந்துகொள்ளலாம்.

**உரிமை கோரப்படாத இபிஎஃப் தொகை:**

நீண்டகாலமாக உரிமை கோரப்படாத நிதியை உறுப்பினர்களுக்கு வழங்குவதை விரைவுபடுத்துவதும், உரிமை கோரும் செயல்பாட்டில் தாமதங்களைக் குறைப்பதும் இந்த புதிய திட்டத்தின் நோக்கமாகும். புதிய முயற்சியின் கீழ், ₹1,000 அல்லது அதற்கும் குறைவான இருப்பு உள்ள கணக்குகளுக்கான க்ளெய்ம்கள் தானாகவே செயல்படுத்தப்படும். கணக்கு வைத்திருப்பவர்கள் பணத்தை திரும்பப் பெறுவதற்கான முறையான கோரிக்கையை சமர்ப்பிக்க வேண்டியதில்லை. முதல் கட்டத்தில், சுமார் ₹5.68 கோடி மொத்த இருப்பு உள்ள சுமார் 1.33 லட்சம் கணக்குகள் இந்தத் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படும்.

**செயல்படாத EPF கணக்கு என்றால் என்ன?**

– EPF விதிகளின்படி, ஒரு உறுப்பினருக்கு 55 வயதானவுடன் அல்லது அவரது ஓய்வு தேதிக்குப் பிறகு மூன்று ஆண்டுகளுக்கு தொடர்ச்சியான பங்களிப்புகள் எதுவும் இல்லை என்றால், அந்தக் கணக்கு செயல்படாததாகக் கருதப்படுகிறது.

– வாரியத் தரவுகளின்படி, மார்ச் 31, 2025 நிலவரப்படி, 31.83 லட்சம் செயல்படாத கணக்குகள் உள்ளன.

– இவற்றில் உள்ள மொத்த இருப்பு ₹10,181 கோடி.

– இதில் வெளிநாட்டு தொழிலாளர் கணக்குகள் இல்லை.

– இந்த PF கணக்குகளைச் செயல்படுத்தவும் உறுப்பினர்களுக்கு விரைவான நிதி பரிமாற்றத்தை உறுதி செய்யவும் இந்தப் புதிய முயற்சி செயல்படுத்தப்பட்டுள்ளது.

தானியங்கி முறை மூலம் விரைவாகும் க்ளெய்ம் செயல்முறை:

இந்த முன்னோடித் திட்டத்தின் கீழ், EPFO உறுப்பினர்களின் ஆதார் இணைக்கப்பட்ட வங்கிக் கணக்குகளுக்கு (Aadhaar Linked Bank Accounts) நேரடியாக நிதியை வரவு வைக்கும். இதற்கு புதிய க்ளெய்ம்களோ அல்லது ஆவணங்களோ தேவையில்லை. இந்த முயற்சி பணம் எடுக்கும் செயல்முறையை எளிதாக்கும். மேலும் இது உறுப்பினர்கள் தங்கள் நிலுவைத் தொகையை விரைவாகப் பெற அனுமதிக்கும். முன்னோடி திட்டத்தின் வெற்றியைத் தொடர்ந்து, ₹1,000 க்கும் அதிகமான இருப்பு உள்ள கணக்குகளுக்கும் இந்த வசதி நீட்டிக்கப்படலாம்.

நிலுவையில் உள்ள PF இருப்பை உறுப்பினர்களின் கணக்குகளில் வரவு வைப்பதை விரைவுபடுத்துவதற்கும், செயலாக்க தாமதங்களைக் குறைப்பதற்கும், சேவை வழங்கலை மேம்படுத்துவதற்கும் இது கணிசமாக உதவும் என்று EPFO கூறுகிறது.

**UPI மூலம் இபிஎஃப் பணத்தை எடுக்கும் செயல்முறை:**

மத்திய தொழிலாளர் அமைச்சகம், EPFO சுமார் 8 கோடி உறுப்பினர்கள் UPI மூலம் நேரடியாக நிதியை எடுக்க அனுமதிக்கும் ஒரு அமைப்பை உருவாக்கி வருவதாக தெரிவித்துள்ளது. ஏப்ரல் 2026 க்குள் இதை வெளியிடுவதே EPFO –இன் இலக்காக உள்ளது. இந்த முயற்சி இபிஎஃப் தொகையை விரைவாக அணுகவும், பணம் எடுக்கும் செயல்முறையை எளிதாக்கவும், சேவையை மேம்படுத்தவும் உதவும். EPFO தற்போதுள்ள மென்பொருளில் உள்ள குறைபாடுகளையும் சரிசெய்து வருகிறது. இது கணக்கு வைத்திருப்பவர்களுக்கு நீண்டகாலமாக நிலுவையில் உள்ள க்ளெய்ம் செயல்முறையிலிருந்து நிவாரணம் அளிக்கும். ஏப்ரல் 2026 முதல் அமலுக்கு வரும் என நம்பப்படும் EPFO 3.0 –வின் ஒரு பகுதியாக இது அறிமுகம் செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இந்த நடவடிக்கை யாருக்கு அதிகமாக உதவும்?**

இந்த நடவடிக்கை, வேலையை மாற்றும்போது முந்தைய நிறுவனங்களை விட்டு வெளியேறிய பிறகு தங்கள் சிறிய PF இருப்புகளை எடுக்க மறந்தவர்களுக்கும், சிக்கலான நடைமுறைகள் காரணமாக அவற்றை கைவிட்டவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக இருக்கும். EPFO அமைப்பில் சிக்கியுள்ள இந்த உரிமை கோரப்படாத பணத்தை அதன் சரியான பயனாளிகளுக்கு பாதுகாப்பாக மாற்றுவதே அரசாங்கத்தின் முதன்மையான குறிக்கோள்.

# போர் சூழலுக்கு மத்தியில் ஈரான் அதிபருடன் பிரதமர் மோடி தொலைபேசியில் பேச்சு..!

டெல்லி, மார்ச். 13–

போர் சூழலுக்கு மத்தியில் ஈரான் அதிபர் மசூத் பெசஸ்கியானுடன் பிரதமர் மோடி தொலைபேசியில் உரையாடினார். ஈரானில் நிலவி வரும் சூழல் குறித்து



அதிபரிடம் பிரதமர் மோடி தனது கவலையை வெளிப்படுத்தினார். அனைத்து பிரச்சனைகளும் அமைதிப் பேச்சுவார்த்தையின் மூலம் தீர்க்கப்பட வேண்டும் என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் கூட்டுப் படைகள் இணைந்து கடந்த பிப்ரவரி 28–ம் தேதி வான்வழி தாக்குதல் நடத்தின. தொடர்ந்து நடந்த தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். மேலும், ஈரானின் பாதுகாப்பு அமைச்சர் அமீர் நசீர்ஜடே மற்றும் புரட்சிகர காவல்படை தளபதி முகமது பாக்பூர் ஆகியோர் கொல்லப்பட்டனர். அதோடு, ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி, அவருடைய மனைவி, மகள், மருமகள் உள்ளிட்ட குடும்பத்தினரும் இஸ்ரேல், அமெரிக்காவின் தாக்குதலில் கொல்லப்பட்டு உள்ளனர்.

இந்த தாக்குதலுக்கு ஈரானும் பதிலடி கொடுத்து வருவதுடன், மோதல் தொடர்ந்து நீடித்து வருகிறது. இதனால் மத்திய கிழக்கு பகுதியில் கடும் பதற்ற நிலை காணப்படுகிறது. கத்தார், ஈராக்கின் குர்திஸ்தான், பஹ்ரைன், ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க படைத் தளங்கள் மீது ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்த நிலையில் ஈரான் அதிபரை இந்திய பிரதமர் மோடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார். இது குறித்து பிரதமர் மோடியின் சமூக வலைதள பதிவில்; ''மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர் சூழல் குறித்து ஈரான் அதிபர் டாக்டர் மசூத் பெசெஸ்கியனுடன் உரையாடினேன். பதற்றங்கள் அதிகரிப்பது, பொதுமக்களின் உயிரிழப்பு மற்றும் உள்கட்டமைப்புக்கு ஏற்படும் சேதம் குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்தேன். அங்குள்ள இந்திய குடிமக்களின் பாதுகாப்பு, தடையற்ற வர்த்தகம் மற்றும் எரிசக்தி போக்குவரத்து ஆகியவை இந்தியாவின் முதன்மையான முன்னுரிமைகளாக உள்ளன. ஈரான் ஜனாதிபதியுடனான உரையாடலில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கான இந்தியாவின் உறுதிப்பாட்டை மீண்டும் எடுத்துரைத்து. பேச்சுவார்த்தை மற்றும் ராஜதந்திரத்திற்கான தேவையை வலியுறுத்தினேன் என கூறியுள்ளார்.

# தேசிய ஜனநாயக கூட்டணியில் த.வெ.க. இணைகிறதா? - புதுச்சேரி முதலமைச்சர் விளக்கம்!



புதுச்சேரி, மார்ச். 13–

புதுச்சேரியில் ஆளும் என்.ஆர்.காங்கிரஸ் கட்சியின் உயர்மட்ட கூட்டம் தனியார் ஓட்டலில் நேற்று இரவு நடந்தது. கூட்டத்தின் முடிவில் முதலமைச்சர் ரங்கசாமி நிருபர்களிடம் கூறியதாவது:–

சட்டமன்றத் தேர்தல் கூட்டணி குறித்து ஆலோசிக்கப்பட்டது. இன்று மாலை மத்திய மந்திரியும் பா.ஜ.க. மேலிட பொறுப்பாளருமான மன்சுக் மாண்டவியா தலைமையில் என்.ஆர். காங்கிரஸ் – பா.ஜ.க. தொகுதி உடன்பாடு பேச்சுவார்த்தை நடைபெறுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

தொடர்ந்து அவரிடம் தேசிய ஜனநாயக கூட்டணியில் விஜய்யின் த.வெ.க. கட்சியை சேர்க்க முயற்சி நடக்கிறதா? என்ற கேள்விக்கு அதுபற்றி தனக்கு தெரியாது என அவர் பதிலளித்தார்.

# விஜயை முதல்வராக ஏற்றால் கூட்டணி: த.வெ.க.!

மதுரை, மார்ச். 13–

த.வெ.க., இணை பொதுச் செயலர் நிர்மல் குமார் நேற்று மதுரையில் அளித்த பேட்டி:

தொகுதி பங்கீட்டில் நீண்ட இழுபறிக்குப் பின், தி.மு.க., வுடன் காங்., கூட்டணி தொடர்கிறது. இது, காங்., முன்னாள் தலைவர் ராகுலுடைய உடன்பாட்டுடன் நடந்ததா என தெரியாது.

ஆனால், காங்., தலைவர்களை மிகக் கேவலமாகவும், அவதூறாகவும் அமைச்சர் ராஜ கண்ணப்பன், மதுரை தளபதி எம்.எல்.ஏ., போன்றோர் பேசினர்.

ஆனால், அவர்களை தி.மு.க., தலைமை கண்டிக்கக்கூட இல்லை. இதை பொறுத்துக் கொண்டு தான், காங்கிரசார், தி.மு.க.,வுடன் கூட்டணியை தொடருகின்றனர். த.வெ.க.,வுக்கு தொடர்ந்து நெருக்கடிகள் கொடுக்கப்படுகின்றன. யார், எங்கிருந்து நெருக்கடி கொடுப்பர் என எல்லோருக்கும் தெரியும். இதை தைரியமாக எதிர்கொண்டு தான் த.வெ.க., தலைவர் விஜய் நிற்கிறார். 234 தொகுதி களிலும் த.வெ.க., போட்டியி டும். விஜயை யார் முதல்வராக ஏற்றுக் கொண்டு கூட்டணிக்கு வருகின்ற னரோ, அவர்களை கூட்டணி யில் சேர்ப்போம். இவ்வாறு அவர் கூறினார்.

# விஜய் தேவையற்ற பேச்சுகளை தவிர்ப்பது நல்லது - வைகோ!



திருப்பத்தூர், மார்ச்,. 13–

திருப்பத்தூரில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ அளித்த பேட்டியில் கூறியதாவது:–

நாடு முழுவதும் கியாஸ் சிலிண்டர் கிடைக்கவில்லை. மயானங்களில் உடல்களை எரிக்ககூட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தமிழக அரசு இதற்காக மயானங்களில், சோலார் பேனல் அமைக்க வேண்டும். தி.மு.க. கூட்டணியில் எந்த தொகுதியில் போட்டியி டுவது குறித்து பின்னர் அறிவிக்கப்படும்.

வருகிற சட்டமன்ற தேர்தலில், ஒருகாலமும் நான் போட்டியிட மாட்டேன். மன நிறைவுடன் பாராளுமன்றத்தில் பணியாற்றி, 1300 முறை பேசியிருக்கின்றேன். தி.மு.க. சமூகநீதிக்கான இயக்கம். கூட்டணி கட்சிகளுடன், சமூக நீதி கடைபிடிக்கப்படும்.

துத்துக்குடி மாணவி பாலியல் வன்கொடுமை செய்து கொலை செய்யப்பட்ட விவகாரத்தில், மிருகங்கள் காட்டில் இல்லாமல் வீட்டில் உள்ளது. ஈவு இரக்கமற்ற மிருகங்கள். இதுவரை இல்லாத சட்டத்தை கொண்டு வந்து அவர்களுக்கு கடும் தண்டனை வழங்க வேண்டும். எல்லா ஆட்சியிலும் இதுபோன்று நடந்துள்ளது. இதனை தடுக்க முதலமைச்சர் முயற்சித்து வருகிறார்.

தி.மு.க.விற்காக என்னால் முடிந்த அளவிற்கு பிரசாரம் செய்வேன். தி.மு.க. கூறினால் அந்த அந்த தொகுதிக்கு சென்று பிரசாரம் செய்வேன். விஜய் இப்போது தான் அரசியலில் நுழைந்து பிரவேசம் செய்கிறார். தேவையற்ற பேச்சுகளை தவிர்ப்பது நல்லது.

கடந்த சில தினங்களாக உலகம் மற்றும் இந்திய நாட்டு மக்கள் அவதிகுள்ளாகுவதற்கு மூலக்காரணம் டிரம்ப் தான். ஹிட்லர் மறுபிறவி எடுத்து தற்போது வெள்ளை மாளிகையில் அமர்ந்துள்ளார். அவர் அதிபராக இருப்பதற்கு தகுதியற்றவர். உளறுவதில், கோமாளியை விட லிமிட் இல்லாமல் மோசமாக பேசுகிறார் டிரம்ப்.

மோடியும், அமித்ஷாவும், தங்களது தகுதிகளை இழந்து, தகுதியில்லாமல் தி.மு.க.வை அழிப்பேன் என்று பேசுகிறார்கள். எதிர்கட்சிகளை மிரட்டி அடியபணிய வைக்கும், பா.ஜ.க. விற்கு தி.மு.க. பற்றி பேச என்ன யோக்கிதம் உள்ளது.

தமிழ்நாட்டை ஏற்கனவே இருந்த கவர்னர் சீரழித்தார். இப்போது வந்தவரும் சளைத்தவர் அல்ல, அவரை போல செயல்படுவார் என சந்தேகம் எழுகிறது.

மோடி எவ்வளவு குட்டிகரணம் போட்டாலும், தமிழ்நாட்டில் ஆட்சியமைக்க முடியாது. திருச்சியில் அவரை வரவேற்கவே ஆள் இல்லை. ஏன் கைத்தட்டவே ஆள் இல்லை. மோடி தமிழ்நாட்டில் நுழையவே முடியாது என்றார்.

# தமிழ்நாடு உள்ளிட்ட 5 மாநில தேர்தல் தேதியை ஓரிரு நாட்களில் தேர்தல் ஆணையம் அறிவிக்க வாய்ப்பு!



புதுடெல்லி, மார்ச். 13–

தமிழ்நாடு, புதுவை, கேரளா, மேற்குவங்காளம் ஆகிய 5 மாநிலங்களின் சட்டப்பேரவை பதவிக்காலம் மே மாதத்துடன் முடிவடைகிறது. எனவே, இந்த மாநிலங்களில் விரைவில் சட்டமன்ற தேர்தல் நடத்த வேண்டியுள்ளது.

இதனால், தேர்தலை நடத்துவதற்கான முன்னேற்பாடுகளை தேர்தல் ஆணையம் முழு வீச்சில் மேற்கொண்டு வருகிறது. தமிழ்நாடு, கேரளா, புதுவையில் ஒரே கட்டமாகவும், மேற்கு வங்காளம், அசாமில் பல்வேறு கட்டங்களாகவும் தேர்தல் நடத்தப்படுவது வழக்கம்.


வரும் சட்டமன்ற தேர்தலிலும் இதே முறை பின்பற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தமிழகத்தில் ஏப்ரல் இரண்டாவது வாரத்திற்கு மேல் தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையில், தேர்தலுக்கான தேதி இன்னும் ஓரிரு தினங்களில் அறிவிக்கப்படும் என்று கூறப்படுகிறது.வரும் 15 அல்லது 16–ஆம் தேதி சட்டமன்ற தேர்தல் தேதியை தேர்தல் ஆணையம் அறிவிக்கலாம் என்று சொல்லப்படுகிறது.

கடந்த 2021 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் தேதி பிப்ரவரி கடைசி வாரத்தில் வெளியானது. தமிழகத்தில் ஏப்ரல் 6 ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற்றது. மேற்கு வங்காளத்தில் 8 கட்டங்களாக வாக்குப்பதிவு நடைபெற்ற நிலையில், மே 2 ஆம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது.



தேனி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக ஏ. எடிசன் புதியதாக பொறுப்பு ஏற்றார். ஏற்கெனவே தேனி மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலராக பணியாற்றிய நல்லதம்பி பதவி உயர்வு பெற்று திருச்சி மாவட்ட உதவி இயக்குனராக மாறுதல் பெற்று சென்றார்.

# அ.தி.மு.க.வில் இணைந்தார் காளியம்மாள்!



சென்னை, மார்ச். 13–

நாம் தமிழர் கட்சியிலிருந்து விலகியிருந்த காளியம்மாள், இன்று அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் அக்கட்சியில் இணைந்தார். இதன் பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர், அதிமுகவில் இணைந்ததற்கான காரணம் குறித்து பேசியதாவது;

''ஒரு தமிழனின் தலைமையில் இயங்கவே அ.தி.மு.க.வில் இணைந்திருக்கிறேன். சாதாரண குடும்பத்தில் இருந்த வந்த எடப்பாடி பழனிசாமியின் தலைமையை ஏற்று அ.தி.மு.க.வில் இணைந்தேன். அ.தி.மு.க.வில் இணைந்தது ஒருங்கிணைந்து எடுத்த முடிவு. எனது தனிப்பட்ட முடிவு அல்ல.

இன்றைய சூழலில் மக்கள் பல்வேறு பிரச்சினைகளை சந்தித்து வருகின்றனர். விலைவாசி உயர்வு, சட்டம், ஒழுங்கு, பெண்கள் பாதுகாப்பு போன்ற நிறைய பிரச்சினைகள் உள்ளது. மக்கள் மாற்றத்தை எதிர்பார்க்கின்றனர்.

அரசியல் கட்சியிலிருந்து விலகினாலும் மக்கள் அரசியலிலிருந்து விலகவில்லை. நாம் தமிழர் கட்சியில் செயல்படுவதற்கு முன்பு அ.தி.மு.க.வில் ஏற்கனவே செயல்பட்டுள்ளேன். எனக்கு பொறுப்பு வழங்குவது குறித்து கட்சித் தலைமை முடிவு செய்யும்.'' என்றார்.

# டான்செட், சீட்டா நுழைவுத் தேர்வுகளுக்கு மார்ச் 16 முதல் விண்ணப்பிக்கலாம்: அண்ணா பல்கலைக்கழகம்!




சென்னை, மார்ச். 13–

தமிழகத்தில் உள்ள பொறியியல் மற்றும் கலை அறிவியல் கல்லூரிகளில் முதுநிலைப் பட்டப்படிப்புகளில் சேருவதற்கான டான்செட் (TANCET) மற்றும் சீட்டா (CEETA) நுழைவுத் தேர்வுகளுக்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பை அண்ணா பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது. 2026–27–ஆம் கல்வி ஆண்டு மாணவர் சேர்க்கைக்காக நடத்தப்படும் இந்தத் தேர்வுகளுக்குத் தகுதியுள்ள பட்டதாரிகள் வரும் மார்ச் 16–ஆம் தேதி முதல் ஏப்ரல் 10–ஆம் தேதி வரை ஆன்லைன் வாயிலாக விண்ணப்பிக்கலாம்.

**எந்தத் தேர்வுக்கு யார் விண்ணப்பிக்க வேண்டும்?**

அண்ணா பல்கலைக்கழகத் துறை கல்லூரிகள், அதன் உறுப்புக் கல்லூரிகள், அண்ணாமலை பல்கலைக்கழகம், அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகள் மற்றும் தனியார் சுயநிதி கல்லூரிகளில் எம்.பி.ஏ மற்றும் எம்.சி.ஏ படிப்புகளில் சேர விரும்பும் மாணவர்கள் டான்செட் பொது நுழைவுத் தேர்வை எழுத வேண்டும்.

அதேபோல், எம்.இ., எம்.டெக்., எம்.ஆர்க். மற்றும் எம். பிளான். ஆகிய முதுநிலை தொழில்நுட்பப் படிப்புகளில் சேர விரும்புவோர் சீட்டா (CEETA–PG) நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020